


29.09.2025

## 39. ‘சுவிசேஷம் அறிவிக்கும் தேவ கட்டளையை’ தள்ளாதிருப்போமாக!

**பா**வ மாந்தர்கள் நிறைந்த உலகில், கிறிஸ்துவின் மறுரூபமடையச் செய்திடும் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கத் தவறிய அல்லது தேவ சித்தத்தை நிறைவேற்றத் தவறிய ஊழிய மாந்தர்கள்...... தங்கள் நீண்ட அங்கியை வைத்தோ, பளபளக்கும் தங்கமுலாம் சிலுவையை வைத்தோ, அல்லது தங்களின் நீண்ட வேத கலாச்சாலை பட்டங்களை வைத்தோ, தேவனுடைய மனதை கவர்ச்சிக்க இயலாது! என்பதை, திட்டமாய் அறிந்து கொள்வார்களாக!!

விசுவாசிகளாயிருக்கும் தன்னுடைய பிள்ளைகளை தேவன் ஒருபோதும் புறக்கணிக்கமாட்டார் என நான் அறிந்திருக்கிறேன்! ஆகிலும், தன்னையும் தன் நித்திய வார்த்தைகளையும் புறக்கணிக்கும் சபைகளை விட்டு, தேவன் நிச்சயமாய் தன்னுடைய பிரசன்னமாகிய மேக ஸ்தம்பத்தையும், அக்கினி ஸ்தம்பத்தையும் விலக்கிக் கொள்வார் என, நான் திட்டமாய் அறிந்திருக்கிறதைப் போலவே, நீங்களும் அறிந்து விழிப்புடன் வாழ்வீர்களாக!

– ரத்னம்